
உம்முடைய வசனமே சத்தியம். யோவான் 17:17

# மகா பிரமிடும்
## வேதாகமும்

பாடம் - 20



## வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் : # 20


## மகா பிரமிடும் வேதாகமும்

**உங்கள் கவனத்திற்கு : ஒவ்வொரு வசனக்குறிப்பையும், தயவுசெய்து உங்கள் வேதாகமத்திலிருந்து முழுமையாக வாசித்தறியவும்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

இன்று நாம் உலகின் "உண்மையான - ஏழு அதிசயங்களில்" ஒன்றான, எகிப்தில் உள்ள **கீசாவின் மகா பிரமிடு** மற்றும் **வேதத்தோடு அதற்குள்ள தொடர்பை** குறித்தும் தியானிப்போம்.

இது **"பழைய ஏழு அதிசயங்களில்"** ஒன்றாக இடம்பெற்றிருந்தது. அவற்றில் **"பாபிலோனின் தொங்கும் தோட்டங்களும்"** ஒன்று என நாம் அறிவோம். அந்த "பழைய" ஏழு அதிசயங்களில், ஆறு அதிசயங்கள் காலப்போக்கில் அழிந்து போயின என்பதையும் நாம் அறிவோம்.



அந்த "பழைய அதிசயங்களில்" மகா பிரமிடு மாத்திரமே இன்றுவரை நிலைத்திருந்து, இன்றைய ஏழு அதிசயங்களிலிருந்து வேறுபட்டு, விசேஷமானதாக தனித்து நிற்கிறது. ஆனால், பிரமிடு குறித்த நம்முடைய ஆராய்ச்சி அதனுடைய சரித்திரத்திற்காக மாத்திரமல்லாமல், அதை விட மேலான அதிசயத்தை அறிவதற்கானதாகும்.

**ஆம், அது வேதத்தோடு பிரமிடுக்கு உள்ள தொடர்பு குறித்ததாகும்.**

இது எப்படி சாத்தியப்படும் என்று ஒருவேளை நீங்கள் ஆச்சரியப்படலாம். அது எப்படி என்று பின்வரும் வசனத்தை வாசித்து துவங்கலாம் –

**ஏசாயா 19:19,20**

**"அக்காலத்திலே எகிப்து தேசத்தின் நடுவிலே கர்த்தருக்கு ஒரு பலிபீடமும், அதின் எல்லையருகே கர்த்தருக்கு ஒரு ஸ்தம்பமும் உண்டாயிருக்கும். அது எகிப்து தேசத்திலே சேனைகளின் கர்த்தருக்கு அடையாளமும் சாட்சியுமாயிருக்கும்; ஒடுக்குகிறவர்களினிமித்தம் அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவார்கள்; அப்போது அவர்களுக்கு ஒரு இரட்சகனையும், ஒரு பெலவானையும் அனுப்பி அவர்களை விடுவிப்பார்."**



ஆம், தீர்க்கதரிசி ஏசாயாவின் இந்த வினோதமான தீர்க்கதரிசனம் **கடந்த 150 ஆண்டுகளுக்கு முன்வரை புரிந்து கொள்ள முடியாமல்** இருந்தது.

இது, வேதத்தில் உள்ள, சேனைகளின் கத்தராகிய – தேவனுக்கு, எகிப்தில் ஒரு **"பலிபீடம்"** இருப்பதாக சொல்கிறது.


**"எகிப்தின் நடுவில்" உள்ளதாக சொல்லப்படுகிறவைகளாகிய "பலிபீடம்" "ஸ்தம்பமும்" எதை குறிக்கிறது?**

**ஏசாயா எகிப்தில் இருப்பதாக பேசின இந்த "பலிபீடம்" கீசாவின் மகா பிரமிடேயன்றி வேறொன்றுமில்லை.**



**ஆச்சரியமாக இருக்கின்றதல்லவா! சரி, அது எப்படி என்று காண்போம்.**

அதற்கு முன்னதாக இந்த மகா பிரமிடு குறித்த விசேஷத்தையும், அதன் பிரம்மாண்டம் பற்றின விவரங்களையும் அறிந்துகொள்வோம்.




இந்த மகா பிரமிடு **486 அடி உயரம்** கொண்டதாக – இன்றுள்ள 40-45 அடுக்கு மாடிக் கட்டிடத்திற்கு ஒப்பாக இருக்கிறது.

அதன் அடித்தளத்தில் உள்ள நான்கு பக்கங்களின் நீளமானது **ஒவ்வொரு பக்கத்திற்கும் 764 அடியாக** உள்ளது.

இது **ஒட்டுமொத்தமாக 13 ஏக்கர்** அளவு கொண்ட நிலப்பகுதியை உள்ளடக்கியுள்ளது.

இந்த “மகா” பிரமிடு என்று அழைக்கப்படுவதற்கான காரணம், எகிப்தின் மற்றெந்த பிரமிடைக் காட்டிலும் இதில் உயர்ந்திருக்கும் அதன் துல்லியமான வேலைப்பாடாகும்.

இது கிறிஸ்தவம் உருவானது முதல் இங்கிலாந்தில் கட்டப்பட்டுள்ள எல்லா ஆலயங்களிலும் கோபுரங்களிலும் பயன்படுத்திராத அளவு கட்டுமானப் பொருட்களை தனக்குள் கொண்டுள்ளது. இது தவிர, எகிப்தின் மற்ற பிரமிடுகளைப் போல் பார்வோன்களின் கல்லறையாய் இராமல், பல வாயில்கள் (அ) வழிகள் மற்றும் சில அறைகளை கொண்டு தனித்தன்மையுள்ளதாய் இருக்கிறது.

**ஒவ்வொரு கற்பாறையும் சராசரியாக 16 டன்கள் எடையுள்ளதாக,** பாறைகளுக்கிடையிலான இடைவெளி "காகிதத்தின் தடிமன்" அளவுடன் மெல்லிய சிமெண்ட் பூச்சை கொண்டுள்ளது.

**இந்த கற்பாறைகளை அவர்கள் எப்படி எடுத்துச் சென்றனர்?**

**அதனதன் இடத்தில் எப்படி பொருத்தினார்?**

**ஒரு கல் மாத்திரம் 880 டன்கள் (அ) 880,000 கிலோ** எடையுடன் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சற்று சிந்தித்துப் பாருங்கள்.

**இது மாபெரும் அதிசயமாக இருக்கிறது.**

அதே சமயம், 30 அடி நீளமுள்ள பாறைகளும் உள்ளன. இன்றைய இயந்திரமயமான உலகில், 30 அடி நீளமுள்ள இரண்டு பாறைகளின் பரப்பை இணைப்பதற்கு இயந்திரம் இல்லை என்பது நாம் சிந்திக்க வேண்டியதாகும்.

**ஒட்டுமொத்த பிரமிடும் 6 மில்லியன் எடையுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.**

இதனை இடிக்க (அ) அகற்ற 1000 டன்கள் வீதம் சுமக்கும் 6000 ரயில் என்ஜின்கள் தேவைப்படும். சற்று சிந்தித்துப் பாருங்கள்.



ஒரு வேளை இதனை அகற்ற திட்டமிட்டால், உண்மையில் அதற்கு எகிப்தின் மொத்த செல்வமும் வேலையாட்களுக்கு கூலி கொடுக்க போதுமானதாக இருக்காது.

இது **4000 - ம் வருட பழைமை** வாய்ந்ததாக கருதப்படுகிறது. இது **கிமு 2170- ல் கட்டப்பட்டதாகவும்** கணிக்கப்படுகிறது.

**இதன் மூலம், மகா பிரமிடு நித்திய காலத்திற்கும் நிலைத்து நிற்கிற நோக்குடன் வடிவமைக்கப்பட்டிருப்பது நிரூபணமாகிறது.**

மேலும், மகா பிரமிடு **மெல்கிசேதேக்** மூலமாக கட்டப்பட்டது என்று கருதப்படுகிறது. இவர் “ஹிக்சாஸ்” என்றழைக்கப்படுகிற “நாடோடி ராஜாக்கள்” வரிசையில் வந்தவர் ஆவார். ஆபிரகாமை ஆசீர்வதித்து அவரிடம் தசமபாகம் பெற்றுக்கொண்ட “ஆசாரியனும் ராஜாவுமானவர்” இவரே ஆவார். (ஆதியாகமம் 14:18-20).

கீசாவின் மகா பிரமிடு கணிதம், புவியியல் மற்றும் வானவியல் ஆகியவற்றில் உள்ள மாபெரும் கொள்கைகளை போதிப்பதாக கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது, அவைகளில் சிலவற்றை காண்போம்.


## கணிதம்

கணித கொள்கைகளில் மிக முக்கியமானதான - பை ( $\pi$ ) விகிதத்தை மகா பிரமிடு வெளிப்படுத்துகிறது.


### இந்த “பை விகிதம்” என்பது என்ன?

இது ஒரு வட்டத்தின் சுற்றளவிற்கும் அதன் விட்டத்திற்கும் இடையில் உள்ள உறவாகும்.

$$\frac{\text{சுற்றளவு}}{\text{விட்டம்}} = \pi = 3.14159$$




கணித மேதைகள் இந்த விகிதத்தை கிரேக்க உயிரெழுத்தில் பதினாராம் எழுத்தாகிய - **“பை ( $\pi$ )”** மூலம் குறிக்கிறார்கள்.





இந்த கொள்கையானது மகா பிரமிடு கட்டப்பட்டு, 2700 **வருடங்களுக்கு பின், ஆறாம் நூற்றாண்டில்தான்** மனிதனால் கண்டு பிடிக்கப்பட்டது.

**உண்மையிலேயே இது அதிசயம் தான்.**

மகா பிரமிடின் உயரம், அரைவிட்டத்தின் அளவாக கருதப்பட்டு அதன் மூலம் ஒரு வட்டம் வரையப்பட்டால், அது பிரமிடின் அடித்தள சதுரத்தின் நான்கு முனைகளையும் தொட்டுச் செல்லும்.

## புவியியல்





மகா பிரமிடு நிறுத்தப்பட்டுள்ள விதம் - அதன் நான்கு முனைகளும் மிகச்சரியாக அதே சமயம் துல்லியமாக, திசை நோக்கியின் நான்கு திசைகளையும் காண்பிக்கிறது.

இது பிரமிடை கட்டின மகா சிற்பி, அதன் மூலம் **நான்கு திசைகளையும் காண்பிப்பது** போல் இருக்கிறது.

இது மாத்திரமல்லாமல், பிரமிடை குறித்த தன்னிகரற்ற வேறொரு உண்மையையும் நாம் காணலாம்.

நாம் ஏசாயா 40:22 - ல் காண்கிறபடி, பூமியானது உருண்டையாக, வட்ட வடிவில் உள்ளதை அறிவோம். இப்பொழுது, ஒரு வட்டம் வரைய பாகைமானி (காம்பஸ்) வேண்டும் என்றும், அதை பயன்படுத்தும் பொழுது ஒரு புள்ளியில் வைத்து வரைய வேண்டும் என்றும் - அது அவ்வட்டத்தின் மையப்புள்ளியாக மாறுவதையும் நாம் அறிந்திருக்கிறோம்.




இப்பொழுது, பூமி வட்டவடிவில் இருக்குமானால் அதற்கு ஒரு மையப்புள்ளி இருக்க வேண்டும்.

**அந்த மையப் புள்ளி எது (அ) எங்கே உள்ளது என்று தெரியுமா?**




**ஆம், அது மகா பிரமிடு நிற்கிற இடமேயன்றி வேறல்ல.**

அந்த வகையில், இது இயற்கையாகவே "**ஜீரோ மெரிடியனாக**" இருந்து **உலகம் முழுவதும் நேரத்தை கணக்கிட ஏற்ற இடமாக இருக்கிறது.**

நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு உண்மை என்னவென்றால், மகா பிரமிடானது மிகச்சரியாக பூமியின் இரண்டு மாபெரும் தரைபகுதிகளாகிய - **ஓரியண்ட் (ORIENT)** என்றழைக்கப்படும் மத்தியதரைக்கடலுக்கு கிழக்குப் பகுதி மற்றும் **ஆக்ஸிடன்ட் (OCCIDENT)** என்றழைக்கப்படும் மத்திய தரைக்கடலின் மேற்குப் பகுதிக்கு இடையில் அமைந்துள்ளது.

**Longitude From Greenwich**




**Lower Egypt the Geographical center of the Land Surface of the whole world**

**இப்படி, எந்த ஒரு கோணத்தில் இருந்து பார்த்தாலும் மகா பிரமிடு, இந்த பூமியின் மிகச் சரியான மையமாக இருக்கிறது.**


# வானவியல்

சூரிய வருடம் என்பது, பூமி சூரியனை ஒரு முழு சுற்று சுற்றி வர எடுத்துக் கொள்ளும் கால அளவு ஆகும். ஜான் டைலர் என்பவர் முதன் முதலில் மகா பிரமிடின் அடித்தள சுற்றளவை அளந்து பார்த்து, **அது 365.242 க்யுபிட்ஸ் அல்லது ஒரு சூரிய வருடத்தின் சரியான கால அளவு** என்று கூறினார்.

**இவ்விதமாக, க்யுபிட்களில் பிரமிடை ஒரு முறை சுற்றி அளக்கும் பொழுது, அது பூமி ஒரு முறை சூரியனை சுற்றி வர எடுத்துக் கொள்ளும் கால அளவை குறிக்கிறது.**

பின்பு, வில்லியம் பெட்ரி முதன் முதலில் பிரமிடில் ஏறும் **ஒவ்வொரு பத்தடிகளுக்கும், செங்குத்தாக ஒன்பது அடிகள் ஏறுவதை** கண்டுபிடித்தார்.

இது அவரை ஒரு பெருக்கு தொகைக்கு $10^9$ (பத்தின் அடுக்கு ஒன்பது) வழிநடத்தியது. பின்பு அவர் பிரமிடின் உயரத்தை $10^9$ இன்ச்களில் (+5807.05") மூலம் பெருக்கும் பொழுது, அது பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் உள்ள தூரத்தை மையில்களில் தருவதை தற்செயலாக கண்டு பிடித்தார். அது 91,651,673 மைல்கள் (146.9 மில்லியன் கி.மீ).




**மனித மூளையை ஸ்தம்பிக்க செய்யும் இவ்வனைத்து கணக்கீடுகளும் - விஞ்ஞானிகள், கணித மேதைகள் மற்றும் வானவியல் ஆராய்ச்சியாளர்களுக்கு மாபெரும் அதிசயமாக இருந்தது.**

இன்றைய உலகின் அதிசயமாக திகழ்கிற பிரமிடில் வெளிப்படுகிற, பூமி மற்றும் அண்டத்தை பற்றின இவ்வளவு உண்மைகளும் பரிசுத்த ஆவியின் ஏவுதல் இல்லாத சாதாரண மனிதர்களால் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டிருக்கும் என்று நம்புவதில் மிகப் பெரிய சந்தேகம் ஏற்படுகிறது.

**அப்படியானால், இந்த "தற்கால இரகசியத்திற்கான" விடை தான் என்ன?**

இதற்கான விடையை தேவனுடைய வார்த்தைகளில் நாம் தேடும்பொழுது கீழ் வரும் வசனத்தை வாசிக்கிறோம்.

**சங்கீதம் 118:22**

**“வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்கு தலைக்கல்லாயிற்று."** மேலும்,

**ஏசாயா 28:16**

**“....இதோ, அஸ்திபாரமான ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன், அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும்..."**

இங்கு இரண்டு வசனங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள கல்லானது - "**மூலைக்கல்**” என்றும், "**தலைக்கல்**" என்றும், அதே சமயம் "**அஸ்திபாரக்கல்**" என்றும் அழைக்கப்படுகிறது.

**இது எதைக் குறிக்கிறது?**

சாதாரணமாக, ஒரு கட்டிடத்தின் அஸ்திபாரக்கல்லை - "**தலைக்கல்**" அல்லது "**மூலைக்கல்**" என்று அழைக்க முடியாது. ஏனென்றால், "**தலைக்கல்**" என்பது கட்டிடத்தின் உச்சியில் பொருத்தப்படுவதை குறிக்கிறது. மாறாக கீழே வைப்பதை அல்ல.

அதே சமயம், உச்சியில் பொருத்தப்படும் "**தலைக்கல்லை**", கீழே வைக்கப்படும் "**அஸ்திபாரக்கல்**" என்றும் அழைக்க முடியாது.

**பிறகு வேறெந்த கட்டிடத்தில் இந்த கல்லானது பொருத்தப்படும் - அப்படி பொருத்தப்படும் பொழுது அது, அஸ்திபாரக்கல்லாகவும், தலைக்கல்லாகவும் அதே சமயம் மூலைக்கல்லாகவும் இருக்கக்கூடும்?**

அது இன்றைய கட்டிடங்களில் ஒன்றாக இருப்பதற்கு சாத்தியமில்லை.

ஆனால், ஒரே ஒரு கட்டிடத்தில் அப்படி இருக்க வாய்ப்பு உண்டு. ஆம், அந்த கட்டிடம் பிரமிடாகும். ஏனெனில், அங்குதான்,

**உச்சியிலிருக்கும் கல் "மூலைக்கல்" லாகவும் அதே சமயம் "தலைக்கல்லாகவும்" இருக்கிறது.**

**அதேசமயம் அந்த கல் "அஸ்திபாரக்கல்லாகவும்" இருக்கிறது.**

**ஏனென்றால், இந்த கட்டிடமானது மேலிருந்து கீழாக கட்டப்படுகிறது.**

ஆகையால், நாம் காண்கிறபடி இந்த பிரமிடின் வடிவம் மற்றும் உருவம் வேத வசனங்களில் ஆழமான ஆவிக்குரிய முக்கியத்துவத்தை உடையதாக இருக்கிறது.

இப்பொழுது, மகா பிரமிடை நேரடியாக குறிக்கின்ற வசனத்திற்கு செல்வோம்.

**ஏசாயா 19:19**

**“அக்காலத்திலே எகிப்து தேசத்தின் நடுவிலே கர்த்தருக்கு ஒரு பலிபீடமும், அதின் எல்லையருகே கர்த்தருக்கு ஒரு ஸ்தம்பமும் உண்டாயிருக்கும்."**

இவ்வசனம் ஏழு அதிசயங்களில் ஒன்றான பிரமிடை குறிக்கக்கூடியதாக இருந்தால், எகிப்தில் தேவன் அதிசயத்தை கட்டியுள்ளதாக பொருள்படும் அது உண்மையா? இதை குறித்து வாசிக்கையில்,

**எரேமியா 32:20**

**“....இஸ்ரவேலிலும் மற்ற மனுஷருக்குள்ளும் இந்நாள்வரைக்கும் விளங்குகிற அடையாளங்களையும் அற்புதங்களையும் தேவரீர் எகிப்து தேசத்திலே செய்து, இந்நாளில் நிற்கும் கீர்த்தியை உமக்கு உண்டாக்கி,...”**

ஆம், இவ்விரண்டு வசங்களும் நேரடியாக கீசாவின் பிரமிடை - எகிப்தின் "**அதிசயத்தை**" - குறிக்கிறது.

இப்பொழுது நாம் அதன் **புவியியல் ஸ்தானத்தை** கண்டு பிடிக்கலாம்.

**“.....அக்காலத்திலே எகிப்து தேசத்தின் நடுவிலே..."**

எகிப்தில் உள்ள கீசா பீட பூமி, மேல் எகிப்தையும் கீழ் எகிப்தையும் பிரிக்கின்ற எகிப்தின் மையக் கோட்டில் உள்ளது.




மகா பிரமிடு இந்த பீட பூமியில் அமைந்திருந்து, கீசா என்ற அதன் பெயரை பெறுகிறது.

**"....அதின் எல்லையருகே கர்த்தருக்கு...."**

நடுவில் அதே சமயம் எல்லை ஓரத்தில் அமைந்திருப்பது என்ற இந்த புவியியல் அம்சமானது, சாதாரணமாக மற்ற தேசங்களுக்கு பொருத்தி பார்க்கையில் முரண்பாடாக தோன்றும் - ஆனால், எகிப்தின் விஷயத்தில் அப்படியாகாது.

இங்கு "**எல்லை**" என்பது எகிப்தின் இரு பகுதிகளையும் - **மேல் எகிப்து** மற்றும் **கீழ் எகிப்து** - பிரிக்கின்ற கோட்டை குறிக்கிறது.

அரபு மொழியில் "**கீசா**" என்ற வார்த்தைக்கு "**எல்லை**" என்று பொருள். மேலும், மகா பிரமிடானது எகிப்திற்குள் காணப்படுகிற இந்த "**எல்லையின்**" மத்தியில் மிக சரியாக அமைந்திருக்கிறது. ஆம், இது மிகப் பெரிய அதிசயமே. மகா பிரமிடு அமைந்திருக்கும் இடத்தை வசனங்கள் மிக தெளிவாக அடையாளம் காட்டுகின்றன.

**இவ்விதமாக வசனங்கள் கீசாவின் மகா பிரமிடு அமைந்திருக்கும் புவியியல் ஸ்தானத்தை தெளிவாக காண்பிக்கிறது.**

வசனத்தின் மற்றொரு பகுதியை நாம் பார்க்கும் பொழுது,

**ஏசாயா 19:20**

**"அது எகிப்து தேசத்திலே சேனைகளின் கர்த்தருக்கு அடையாளமும் சாட்சியுமாயிருக்கும்."**

**இங்கு "அடையாளம்" மற்றும் "சாட்சி" என்பது எதை குறிக்கும்?**

"**அடையாளம்**" இந்த வார்த்தை எபிரெய பதமாகிய "**ஓளட்**" லிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு "**அடையாளம்**" அல்லது "**ஆதாரம்**" என்று பொருளாகும்.

**(Strong's) எபிரெய எண் : 226**

**மகா பிரமிடு எவ்விதத்தில் "சேனைகளின் கர்த்தருக்கு" ஒரு "அடையாளமாக" இருக்கக்கூடும்?**

இதன் பிரமிக்க வைக்கும் **கட்டிட நுணுக்கமும்**, அதற்குள் **புதைந்து கிடக்கிற ஞானமும்** - "**மனிதன் தேவனுடைய சிருஷ்டி**" என்று சொல்லும் நிலையிலும், சர்வ லோகத்தின் மகா சிருஷ்டிகராக - நம்முடைய அதரிசனமான தேவன் - இருக்கிறார் என்பதையும் இது சாட்சி பகர்கிறது.

ஆம், இந்த மகா பிரமிடு ஒரு அதிசயிக்கத்தக்க "**சேனைகளின் கர்த்தருக்கு அடையாளமும்**" - மாக இருக்கும்.

"**சாட்சி**" இந்த வார்த்தையானது எபிரெய பதமாகிய "**எட்**" என்ற பதத்திலிருந்து மொழிபெயர்க்கப்படுகிறது. அதற்கு "**பதிவு செய்தல்**" அல்லது "**சாட்சி**" என்று பொருளாகும்.

**(Strong's) எபிரெய எண் : 5707**

**மகா பிரமிடு எவ்விதமான சாட்சியை "சேனைகளின் கர்த்தருக்கு" கொடுக்கிறது?**

பரிசுத்த வேதாகமத்தில் தேவன் வெளிப்படுத்தியுள்ள மனுக்குலத்திற்கான **தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை பதிவு செய்து "சாட்சி" கொடுக்கிறது.**

**இது ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா?**
**இது எப்படி சாத்தியமாகும்?**


அனைத்து வாயில்கள் மற்றும் அறைகளும் அவைகளுடைய விவரங்கள் மற்றும் அளவுகளும் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை காணப்படுகிற தேவனுடைய தெய்வீக திட்டத்திற்கு பரிபூரண சாட்சியாக இருக்கிறது.

ஆம், தேவன் தம்முடைய தெய்வீக திட்டம் பற்றின இரண்டாவது சாட்சியை – கற்களில் தந்திருக்கிறார். ஒரு வகையில் பின்வரும் வார்த்தைகளை இயேசு உச்சரிக்கையில் மகா பிரமிடை தன் இருதயத்தில் வைத்திருக்க வேண்டும்.

**“அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக - இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.” (லூக்கா 19:40)**

ஆம், கீழே கொடுக்கப்பட்டுள்ள வரை படத்தில் கல்லினாலான வேதாகமம் என்று அழைக்கப்படுகிற பிரமிடுக்குள் காணப்படுகிற வாயில்கள் மற்றும் அறைகள் குறிக்கப்பட்டுள்ளது. ஆம், இந்த கற்குவியல்கள் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மனுக்குலத்திற்கான தேவனுடைய மாபெரும் தெய்வீக திட்டத்தை அறிவிக்கிறது.

## மகா பிரமிடின் பாதைகளும் அறைகளும்




இந்த பல வகையான வாயில்கள் மற்றும் அவைகளுடைய சிறப்பம்சங்களை காணும் முன் **ஏசாயா 19:19** வசனத்தில் காணப்படுகிற வேறு இரண்டு வார்த்தைகளை புரிந்துக் கொள்ள முயற்சிக்கலாம்.

**“அக்காலத்திலே எகிப்து தேசத்தின் நடுவிலே கர்த்தருக்கு ஒரு பலிபீடமும், அதின் எல்லையருகே கர்த்தருக்கு ஒரு ஸ்தம்பமும் உண்டாயிருக்கும்.”**

**எவ்விதத்தில் மகா பிரமிடானது சேனைகளின் கர்த்தருக்கு “ஒரு ஸ்தம்பமும், ஒரு பலிபீடமாகவும்” இருக்கிறது?**

**“ஒரு ஸ்தம்பம்”**- இந்த பிரமிடு எவ்விதத்தில் ஸ்தம்பமாக இருக்கக்கூடும்?

நிச்சயமாக, இது ஒரு ஸ்தம்பம் அல்ல. ஆனால், மாபெரும் சின்னமாக இருக்கிறது. எபிரெய பதத்தை ஆராய்ந்து அதன் பொருளை கண்டு பிடிப்பது இந்த காரியத்தை சரியாக புரிந்து கொள்ள நமக்கு உதவும்.

இங்கு பயன்படுத்தபட்டுள்ள எபிரெய பதமானது **"மத்சேபாஹ"**

**(Strong's) எபிரெய எண் : 4676**

இதற்கு **"செங்குத்தான கல்"** அல்லது **"நினைவுத் தூண்"** என்று பொருளாகும்

நாம் யுத்த வீரர்கள் மற்றும் தியாகிகளையும் அவர்களுடைய சேவைகளையும் ஜனங்களுக்கு நினைவு படுத்துகிற நினைவு தூண்களை கண்டிருக்கிறோம். அதுபோலவே மகா பிரமிடானது ஒரு மகா அதரிசனமான, ஜீவனுள்ள தேவனை நினைவுப்படுத்துகிற **"நினைவுத் தூணாக"** இருக்கும் என்று வாசிக்கிறோம்.

## 1 தீமோத்தேயு 6:16

**"ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக."**

ஆம், மகா பிரமிடானது தம்முடைய மகிமையிலும், தம்முடைய பராக்கிரமத்திலும் சதா காலமும் இருக்கிற தேவனுடைய நினைவுத் தூணாக இருக்கும்.

## "பலிபீடம்"

பலிபீடம் என்பது பலிகள் ஏறெடுக்கப்படும் இடமாகும். விலங்குகளின் தகன பலிகள் செலுத்தப்படும் வெண்கல பலிபீடமாக இருக்கலாம். **(யாத்திராகமம் 40:29)**

அல்லது தூப பலி செலுத்தப்படுகிற தூப பலிபீடமாக இருக்கலாம். **(யாத்திராகமம் 40:22,27)**

....இவ்விரண்டு பலி பீடங்களும் ஆசரிப்பு கூடாரத்தில் இருந்ததை நாம் அறிவோம். ஆனால், மகா பிரமிடு இவைகளில் ஒன்றல்ல.

**பின் எவ்விதத்தில் அது "ஒரு பலி பீடமாகும்"?**

நாம் இப்பொழுது மூன்றாவதாக ஒரு பலி குறிப்பிடப்பட்டுள்ளதை வாசிக்கலாம்.

## எபிரெயர் 13:15

**"ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின்**

**கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்.”**

ஆம், அது உலகத்தின் ஜனங்கள் யாவரும் “துதியின் பலிகள்” செலுத்தும் இடமாக இருக்கும். அந்த துதியானது பூமியின் ஜனங்கள் யாவரும் பிரமிடை காணும் பொழுது விளங்கும் தேவனுடைய மகிமையை உணர்ந்து இருதயத்திலிருந்து ஏறெடுக்கப்படுகிறதாக இருக்கும்.

இப்பொழுது நாம் பிரமிடின் வாயில்கள் மற்றும் அதன் சிறப்பம்சங்களை குறித்த ஆராய்ச்சிக்கு கடந்து செல்லுவோம்.

மகா பிரமிடானது அதனுள் எவ்விதமான எழுத்து வேலைகளையும் கொண்டிருக்கவில்லை. ஆனால், அதனுள் இருக்கும் வாயில்கள் மற்றும் அறைகள் தேவன் மனிதனுக்காக ஏற்படுத்தி, ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை வெளிப்படுத்தப்பட்டிருக்கும் மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தை குறித்து விரிவாக வெளிப்படுத்துவதை நாம் காண்கிறோம்.


இது எப்படி என்று நாம் காண்போம்.

# நுழைவாயில்

மகா பிரமிடின் நுழைவாயில் தரை மட்டத்திலிருந்து 50 அடி உயரத்தில் காணப்படுகிறது. இந்த நுழைவாயில் நீண்ட நாட்களாக கண்டுபிடிக்கப்படாமல், உள்ளே இருக்கிறதாக எண்ணப்பட்ட பொக்கிஷங்களை எடுப்பதற்காக வேறு சில நுழைவாயில்கள் கொள்ளையர்களால் ஏற்படுத்தப்பட்டது, ஆனால், பிரமிடின் நுழைவாயிலுக்குள் நுழைய முயற்சிக்கிறவர்களுக்கு ஒரு விநோதமான அனுபவம் சம்பவிக்கிறது.

அந்த நுழைவாயில் அவரை கீழ் நோக்கி இழுத்து சென்று தரை மட்டத்திலிருந்து வெகு ஆழத்தில் அமைந்துள்ள ஒரு குழிக்குள் அழைத்து செல்லுகிறது.

**ஆம், இந்த வாயில் இறங்கு பாதை என்று அழைக்கப்படுகிறது**



## இது எதை குறிக்கும்?


இது வெகு விரைவில் – அதாவது ஏதேனில் பரிபூரண நிலையில் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டதற்கு பின்பு பாவத்திற்குள்ளாக மரணத்தை நோக்கி கீழாக எடுத்து வைக்கப்பட்ட காலடியை இந்த "குழி" யானது குறிக்கிறது.

இதை பின் வரும் வசனம் காண்பிக்கிறது.

### ரோமர் 5:12

**"இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று."**

ஆம், இது கீழ் நோக்கி நிறைவேறிய மனிதனுடைய வீழ்ச்சியை சித்தரிக்கிறதாகும். இந்த வீழ்ச்சி "ஒரு மனுஷனாகிய" ஆதாமின் மூலம் துவங்கியது.



தரை மட்டத்திலிருந்து 50 அடி உயரம் என்பது தேவன் மனிதனை சிருஷ்டித்த மகிமையின் நிலையை குறிக்கிறதாக வாசிக்கிறோம்.

### ஆதியாகமம் 1:26

**"பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்."**

ஆம், மனிதன் ஏதேனில் சிருஷ்டிக்கப்பட்ட பொழுது பூமியின் சகல மிருக ஜீவன்களை பார்க்கிலும் மிக உயர்ந்த ஸ்தானத்தில் படைக்கப்பட்டு இருந்தான்.


தரை மட்டம் என்பது பூமியின் மற்ற சிருஷ்டிகளாகிய – மிருகங்கள், பறவைகள், மச்சங்கள் போன்றவைகளுடைய ஜீவ நிலையை குறிக்கும்.

மனிதனுடைய சிருஷ்டிப்பில் ஒரு மாபெரும் வித்தியாசம் இருந்தது. அது அவன் மற்ற மாம்சங்களோடு மாம்சமாக சிருஷ்டிக்கப்பட்டிருந்தாலும் அவைகள் எல்லாவற்றையும் விட மேலான நிலையிலிருந்தான்.

ஆனால், அதற்கு பின்பு வெகு சீக்கிரத்தில் அவன் பாவத்திற்குள் வீழ்ந்தான். இதை நாம் பின் வருகிற காரியத்தில் காண்கிறோம்.

# இறங்கு பாதை

இது மனிதனுடைய வீழ்ச்சியையும், அந்த பாவ நிலையில் மேன்மேலும் அவன் அடைந்த முன்னேற்றத்தையும் குறிக்கிறது. “இந்த பாதை” முதன் முதலில் ஆதாமின் மூலம் திறக்கப்பட்டு பிற்பாடு மொத்த மனுக்குலத்தாலும் கடந்து செல்லப்பட்டது. இந்த பாதையானது வேதத்தில் விசாலமான வழி என்று வேறு விதமாக அழைக்கப்படுகிறது. **- (மத்தேயு 7:13)**




# குழி

இது இறங்கு பாதையின் முடிவு - மிக அருமையாக விசாலமான வழியின் முடிவை குறிக்கிறது.

**"...கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது..." (மத்தேயு 7:13)**

**ஆம், இங்கு கேடு என்பது பாவ வழிகளின் முடிவாகிய - மரணத்தை குறிக்கிறது. (ரோமர் 6:23)**

**சங்கீதம் 55:23**

**“...நீர் அவர்களை அழிவின் குழியில் இறங்கப்பண்ணுவீர்..."**

**ஏசாயா 38:18**


**“பாதாளம் உம்மைத் துதியாது, மரணம் உம்மைப் போற்றாது, குழியில் இறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தை தியானிப்பதில்லை."**

ஆம், மரணம் "**பாதாளம்**" என்றும், "**குழி**" என்றும், அதே சமயம் வேதம் போதிக்கிற "**நரகமாகிய**" மரித்து போன நிலையையும் குறிக்கும். இப்பொழுது, இறங்கு பாதைக்குள்ளாக செல்கிறவர் சிறிது தூரம் சென்ற பின் முதலாம் ஏறு பாதைக்கு வருகிறார்.

# ஏறு பாதை மற்றும் கிரானைட் அடைப்பு

இந்த பாதையானது "இறங்கு பாதை" யிலிருந்து தப்பித்து கொள்ளுவதற்கான வழி போன்று உள்ளது.

இது மனுக்குலத்தின் மீது விழுந்த மரண சாபத்திலிருந்து தப்பித்து கொள்ளுவதற்கான முதலாம் வாய்ப்பை குறிக்கும் - அது இஸ்ரயேல் ஜனங்களுக்கு தேவன் கொடுத்த நியாயப்பிரமாணமாகும். அதை ஒருவர் கடைப்பிடிக்கும் பொழுது ஜீவன் வாக்குத்தத்தமாக கொடுக்கப்பட்டதை வாசிக்கிறோம்.




**லேவியராகமம் 18:5 / கலாத்தியர் 3:12** - **“...அவைகளைச் செய்கிற மனுஷன் அவைகளால் பிழைப்பான்..."**

பின்பு நாம் காண்பது என்னவென்றால்....

ஒரு "**சிவப்பு நிற கிரானைட் அடைப்பு**" இந்த ஏறு பாதையை முற்றிலுமாக அடைத்து கொண்டிருப்பதை காண்கிறோம். இது ஒருவரையும் உள்ளே பிரவேசிக்காதபடி அமைந்துள்ளது. இதன் மூலம் ஜீவனுக்கு ஏதுவான வழியாக இருந்தாலும் உண்மையில்

அப்படிப்பட்ட வழி அல்ல என்பதை மிக அருமையாக அடையாளப்படுத்துகிறது.

**ரோமர் 7:10**

**"இப்படியிருக்க, ஜீவனுக்கேதுவான கற்பனையே எனக்கு மரணத்துக்கேதுவாயிருக்கக்கண்டேன்."**

### அந்த "சிகப்பு நிற கிரானைட் அடைப்பு" எதை குறிக்கும்?

இது தெய்வீகமான ஏதோ ஒன்றை குறிக்கிறது. ஏனென்றால், சிகப்பு நிற கிரானைட் இராஜாவின் அறையிலும், முன் - அறையில் உள்ள கிரானைட் தொங்கு பலகையிலும் காணப்படுகிறது.

ஆம், இது தெய்வீகமும், பரிபூரணமுமான தேவனுடைய நியாயப்பிரமாணத்தை குறிக்கும் - நீதியில் பரிபூரணமாகும்.

ஆனால், தேவனுடைய பூரண பிரமாணத்தை அபூரணர்களான இஸ்ரயேல் ஜனங்கள் கடைபிடிக்க முடியாமல் போனது.

இதன் மூலம் இந்த பாதையானது, தேவன் மோசே மூலமாக இஸ்ரயேலருக்கு கொடுத்த நியாயப்பிரமாண வழியை குறிக்கிறது.

**அந்த வழி உண்மையில் ஒரு வழியே அல்ல.**

இப்பொழுது, இஸ்ரயேலர் அந்த நியாயப்பிரமாண வழியில் நடந்தார்களா என்று நாம் சிந்திப்போம்!

ஆம், இந்த பாதையானது மிக தாழ்வானதும் ஏறுவதற்கு அசவுகரியமானதாகவும் இருந்தது.

இஸ்ரயேல் ஜனங்கள் தேவனுடைய பூரண பிரமாணத்தை கடைப்பிடிக்கும் முயற்சியில் சந்தித்த அசவுகரியமான கட்டுப்பாடுகளை மிக அருமையாக குறிக்கிறது.

**கலாத்தியர் 4:24**

**“இவைகள் ஞான அர்த்தமுள்ளவைகள்; அந்த ஸ்திரீகள் இரண்டு ஏற்பாடுகளாம்; ஒன்று சீனாய் மலையிலுண்டான ஏற்பாடு, அது அடிமைத்தனத்திற்குள்ளாகப் பிள்ளை பெறுகிறது, அது ஆகார் என்பவள்தானே.”**

ஆம், இவ்விதமாக இஸ்ரயேல் ஜனங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கட்டுண்ட நிலையில் இருந்தனர்.

இப்பொழுது இறங்கு பாதையிலிருந்து வெளியே வருவதற்கான வேறு பாதை ஏதேனும் இருந்ததா?

ஆம், இந்த இறங்கு பாதைக்கு கீழாக "கிணற்று கணை" என்று அழைக்கப்படுகிற, மேலே வழி நடத்துகிற ஒரு பாதை உள்ளது. அது திறந்த வழியாக இருக்கிறது.

# கிணற்று கணை

**இந்த கிணற்று கணை மாத்திரமே இறங்கு பாதையிலிருந்து வெளியேறுவதற்கான ஒரே வழியாகும்.**

### இது எதை குறிக்கிறது?

இது மரணம் மற்றும் பாவத்தின் வழியிலிருந்து மனுக்குலம் மீட்கப்படுவதற்கான ஒரே வழியை குறிக்கிறது. இந்த வழியை குறித்து பின் வரும் வசனத்தில் வாசிக்கிறோம்.

**அப்போஸ்தலர் 4:12**

**“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.”**

ஆம், அந்த மெய்யான வழி இயேசுவே. அதனால் அவர் கூறுகையில்,

**யோவான் 14:6**

**“நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்."**

இவ்விதமாக இந்த "கிணற்று கணை" தம்மை விசுவாசிக்கிற உலக ஜனங்களுக்கு தாமே ஜீவனை கொடுக்கிற இரட்சகராகிய இயேசுவை குறிக்கும். இதை குறித்து அவர் கூறுகையில்,

**யோவான் 11:25**

**“இயேசு அவளை நோக்கி, நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்..."**

இப்பொழுது மேலே வழிநடத்துகிற கிணற்று கணையானது தரை மட்டத்தில் "**கிராட்டோ**" என்று அழைக்கப்படுகிற இடத்திற்கு அழைத்து வருகிறது. இது எதை குறிக்கும்? நாம் காணலாம்.

# கிராட்டோ

இது கிணற்று தரை மட்டத்தில் காணப்படுகிற ஒரு இடமாகும். இது பூமியில் ஒரு வெடிப்பு போல பிளந்திருக்கிறதை காண்கிறோம்.

இது கல்வாரி சிலுவையில் "..**எல்லாருக்கும் மீட்கும் பொருளாக..**" **(1தீமோத்தேயு 2:6)** தம்மை ஒப்புக்கொடுத்த இயேசுவின் மரணத்தை குறிக்கிறது. இந்த மரணத்தின் மூலம் பின்வரும் தேவ வார்த்தை நிறைவேறியது.

**ஓசியா 13:14**

**“அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன், அவர்களை மரணத்துக்கு நீங்களாக்கி விடுவிப்பேன்..."**

ஆம், சிலுவையின் மீதான இயேசுவின் மரணத்தின் மூலம் மனுக்குலத்தின் மீது விழுந்த மரண சாபம் அழிக்கப்பட்டது.

"**ஜீவனுக்கு ஜீவன்**" கண்டுபிடிக்கப்பட்டதினால் - மனுக்குலம் மீட்கப்பட்டது. இதை குறித்து வாசிக்கையில்,

**2 தீமோத்தேயு 1:10**

**“...அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்."**

இப்பொழுது "**கிராட்டோ**" எனும் பெயர் பயபக்தியுடன் நினைவு கூறக்கூடிய இடத்தை குறிக்கிறது. இது சில ரோம கத்தோலிக்க ஆலயங்களில் உள்ள பிரகாரங்களை போன்று ஜனங்கள் வந்து நினைவு கூறவும் ஜெபிக்கவும் பயன்படுத்துவதை போன்றதாகும்.

அதுபோலவே இந்த கிராட்டோவும் நித்திய காலமும் நமது ஆண்டவர் நாம் ஜீவிக்கும் படியாக அவர் கிபி 33, ஏப்ரல் 3ம் தேதி, வெள்ளி அன்று மரித்த கல்வாரியை நினைவு கூறும்படி உள்ளது.

பின்பு நாம் காண்கையில் கிராட்டோவிற்கு அடுத்தபடியாக அந்த பாதை நேராக மேல் நோக்கி இருவிதமான இரட்சிப்பை - ஒன்று பரத்துக்குரியது மற்றொன்று பூமிக்குரியது, குறிக்கிற இரு திசைகளை நோக்கி செல்லுகிறது.
இதை குறித்து நாம் வாசிக்கையில்,

**2 தீமோத்தேயு 1:10**

**“நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக்கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது; அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்.”**


ஆம், அந்த பாதை போய் சேருகிற இரு இடங்களும் இருவிதமான இரட்சிப்பை குறிக்கிறது.

**"ஜீவன்"** - ராணியின் அறை குறிக்கிற பூமிக்குரிய இரட்சிப்பு **(1 தீமோத்தேயு 2:3,4)**

**"அழியாமை"** - இராஜாவின் அறை குறிக்கிற பரலோக இரட்சிப்பு **(ரோமர் 2:7).**

**கிராட்டோவிலிருந்து புறப்படுகிற பாதையானது பயணித்து இந்த இரண்டு அறைகளுக்கும் வழிநடத்துகிற பாதைகளின் ஆரம்ப சந்திப்பை அடைகிறது. இந்த பாதைகளை குறித்த ஆராய்ச்சிக்கு நாம் கடந்து செல்லலாம்....**

## கிரேண்டு காலரி



இராஜாவின் அறைக்கு செல்லும் பாதையில் ஒருவர் பிரவேசிக்கும் பொழுது "**கிரேண்டு காலரி**" என்று அழைக்கப்படுகிற பாதைக்குள் நுழைகிறார்.

இது ஒரு விஸ்தாரமாக கட்டப்பட்ட ஏறு பாதையாகும்.

இது 28 அடிகள் உயரமும், 155 அடிகள் நீளமும் மற்றும் 6 அடிகள் அகலமும் கொண்ட விஸ்தாரமான இடமாகும். இது கிரேண்டு காலரி என்று மிக சரியாக அழைக்கப்படுகிறது. பிரமிடில் வேறு எந்த பகுதியிலும் உள்ள பாதைகளில் இவ்வளவு பெரிய இட வசதியை காண முடியாது.

## இது எதை குறிக்கும்?

இது சுவிசேஷ யுகத்தின் (எபிரெயர் 3:1) பரம அழைப்பையும் அதில் உள்ள சுதந்திரத்தையும் குறிக்கும்.

**கலாத்தியர் 5:1,13 - "....கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்."**

ஆம், இந்த கிரேண்ட காலரியானது கிறிஸ்தவர்களுடைய அழைப்பையும் அதில் கிறிஸ்தவ வளர்ச்சிக்கான மூன்று நிலைகளில் முதல் நிலையாகிய - "**அழைக்கப்பட்ட**" நிலையை மிக அருமையாக சித்தரிக்கிறது. இங்கு காணப்படுகிற மிக பெரிய சுதந்திரமானது ஒருவருடைய பாவங்களுக்கான மன்னிப்பும் அதே சமயம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிற நிலையில் தேவனிடம் ஜெபத்தின் மூலம் நெருங்கக்கூடிய வாய்ப்பையும் குறிக்கும். இதை குறித்து வாசிக்கையில்,

**ரோமர் 5:1**

**“இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.”**

ஆம், நம்முடைய பாவங்களுக்கான மன்னிப்பை பெறுவது மிக பெரிய ஆசீர்வாதமாகும்.

இப்பொழுது வேறொரு காரியத்தை கவனிக்கலாம்.

“**கிராட்டோ**" வழியாக செல்லும் "**கிணற்று கணை**" இந்த கிரேண்டு காலரிக்கு வழி நடத்தும். அதே சமயம், முதலாம் ஏறுபாதையும் அதன் குறுகிய மற்றும் செங்குத்தான நிலையில் "**கிரேண்டு காலரி**" யின் நுழை வாயிலுக்கு வழி நடத்துவதை காண்கிறோம்.

## இது எதை குறிக்கும்?

இது கலாத்தியர் 3:24 - ல் உள்ள அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளை குறிக்கிறது.

**"இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது."- கலாத்தியர் 3:24**

ஆம் யூதர்களை கட்டுண்டவர்களாக்கிய நியாயப்பிரமாணமானது, அவர்களை நீதிமான்களாக்கவில்லை. அந்த குறுகிய செங்குத்தான ஏறுபாதை (நியாயப்பிரமாணம்) அவர்களுக்கு கடினமாக இருந்தபடியால் அது யூதர்களை இயேசுகிறிஸ்துவின் மீதான விசுவாசத்திற்கு வழி நடத்தியது.

**"வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே - நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." - மத்தேயு 11:28-30**

ஆம், உண்மையில் கிரேண்டு காலரிக்குள்ளாக முதன் முதலில் பிரவேசித்தவர்கள் யூதர்களே ஆவர்.

இந்த **கிரேண்டு காலரி** குறித்து நாம் மேலும் அறிவது என்னவென்றால், அது செங்குத்தாகவும் வழுக்கக்கூடியதாகவும் இருப்பதால், அதன் வழியாக ஏறுவது என்பது இருபுறமும் பிடிப்பிற்காக வைக்கப்பட்டிருக்கும் துவாரங்கள் உதவியினாலேயாகும்.

ஆனால், இன்று சுற்றுலா பயணிகளுக்காக துவாரங்கள் இருந்த பகுதியில் கைப்பிடிகள் வைக்கப்பட்டுள்ளன.

இந்த கிரேண்டு காலரியானது முடிவடைகிற உச்சியில் "மிக பெரிய படிக்கட்டு" என்றழைக்கப்படும் ஸ்தானத்திற்கு அழைத்து சென்று அதன் வழியாக "முன் அறைக்கு" வழி நடத்துகிறது.

## இவை அனைத்தும் எதை குறிக்கும்?

இது ஒரு கிறிஸ்தவன் "**தரிசித்து**" நடவாமல் "**விசுவாசித்து**" நடக்கிற ஆரம்ப கால ஓட்டத்தை குறிக்கிறது.

### 2 கொரிந்தியர் 5:6

**“நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்."**

சரியான இடைவெளியில் காணப்படும் "துவாரங்கள்" நம்முடைய அன்றாட வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தையின் மூலம் கிடைக்க பெறும் வழி நடத்துதல் மற்றும் அழைக்கப்பட்ட

கிறிஸ்தவன் தேவனுடைய திட்டம் மற்றும் அவருடைய வாக்குத்தத்தங்கள் குறித்த வேத வசனத்தின் மூலம் முன்னேறி செல்வதற்கு ஏதுவான அனுபவங்களை குறிக்கும்.

கிரேண்டு காலரியில் முன்னேறி செல்வது "விசுவாசிகளின்" வளர்ச்சியையும், அது தொடரும் பட்சத்தில் கிறிஸ்தவர்களுக்கான உரிமை மற்றும் அழைப்பை புரிந்து கொள்வதற்கு வழிநடத்தப்பட்டு,விசுவாசிகளாகவே இருந்து விடாமல் பின்பற்றுகிறவர்களாக மாறுவதை குறிக்கும். இதை குறித்து வாசிக்கையில்,

**பிலிப்பியர் 1:29 / ரோமர் 12:1 / 1 பேதுரு 2:21**

**“ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது.”**
**“அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.”**
**“இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.”**

ஆம், கிறிஸ்தவ ஜீவியத்தில் அடுத்த இரண்டு நிலைகளும் "**மிக பெரிய படிக்கட்டு**" மற்றும் "**முன் அறையை**”" அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது.

## மிக பெரிய படிக்கட்டு மற்றும் முன் அறை

முன் அறைக்கான நுழைவாயில், மிக பெரிய படிக்கட்டு என்றழைக்கப்படும் நடை பாதையாக இருக்கிறது. அங்கிருந்து ஒருவர் பின்னோக்கி பார்க்கும் பொழுது,

1. அவர் கடந்து வந்த கிரேண்டு காலரி காணப்படுகிறது. இது ஒரு கிறிஸ்தவன் விசுவாசியாக இருந்த அவருடைய வாழ்க்கையையும் அதில் அவர் பெற்ற தேவ வழிநடத்தல், பாதுகாப்பு மற்றும் அனுபவங்கள் அனைத்தையும் நினைவூட்டுவதாக இருக்கிறது.

**2.** ஒருவர் அதற்கும் கீழாக இருக்கிற முதலாம் ஏறு பாதையை சிகப்பு நிற கிரானைட் வரை காணலாம். இது தேவன் அவரை நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டிருந்த இஸ்ரயேலரை விட ஒரு மேலான வாய்ப்பில் அழைத்திருப்பதை நினைவு கூறுகிறது.

**3.** ஒருவர் திறந்திருக்கும் கிணற்று கணையை கிரேண்டு காலரியில் காணலாம். இதன் மூலம் பிதாவாகிய தேவனுக்கு பூரணமாக கீழ்ப்படிந்து இயேசு தம்முடைய முன் உதாரணத்தின் மூலம் திறந்து வைத்த வாய்ப்பை நினைவு கூற முடியும்.

**4.** இறுதியாக, அவர் சிகப்பு நிற கிரானைட் அடைப்பையும் தாண்டி இருக்கும் இறங்கு பாதையையும் நினைவு கூறலாம். இது மனுக்குலத்தின் மேல் சுமத்தப்பட்ட மரண சாபத்தை உணரவும் அதே சமயம் கர்த்தரோடு மரிப்பதற்கு தான் பெற்று கொண்ட மாபெரும் வாய்ப்பையும் நினைவு கூற உதவும்.

இதை குறித்து வாசிக்கையில்,

**2 தீமோத்தேயு 2:11**

**"....என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்;.."**

ஆம், தியாக மரணம் என்பது இயேசு மரித்தது போல அவர் மரித்த விதத்தில் மரிப்பதாகும். இவ்விதமாக, அழைக்கப்பட்ட கிறிஸ்தவன் முடிவெடுக்கவேண்டிய முக்கிய தருணத்தில் ஆண்டவர் சொன்னது போல உணருகிறார்.

**லூக்கா 14:28-30**

**"உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து, அஸ்திபாரம் போட்டபின்பு முடிக்கத் திராணியில்லாமற்போனால், பார்க்கிறவர்களெல்லாரும்: இந்த மனுஷன் கட்டத்தொடங்கி முடிக்கத் திராணியில்லாமற்போனான் என்று சொல்லித் தன்னைப் பரியாசம் பண்ணாதபடிக்கு, அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப்பாராமலிருப்பானோ?"**

**ஆம், இதுவே மிக பெரிய படிக்கட்டை குறிப்பதாகும்.**

**அது ஒரு முடிவு எடுக்க வேண்டிய ஸ்தலம்**

இப்பொழுது, இராஜாவின் அறையை நோக்கி முன்னேறும் பொழுது மூன்று படிகள் இருப்பதையும் அவைகள் இயேசுவை பின் பற்றி


வருகிறவர்களை குறிக்கிறதாகவும் இருக்கிறது. **(மத்தேயு 16:24)**



**"...தன்னை தான் வெறுத்து..."** (1)

**"...தன் சிலுவையை எடுத்துக்கொண்டு..."** (2)

**"...என்னைப் பின்பற்றக்கடவன்..."** (3)




இந்த முன் அறையை ஒருவர் கடக்கும் பொழுது மூன்று முறை குனிந்து செல்ல வேண்டியது படத்தில் காண்பிக்கப்பட்டபடி அவசியமாக இருக்கிறது.

இவைகள் எதை குறிக்கிறது என்று நாம் பார்க்கலாம்.

**1.** முதல் முறை குனிவது என்பது **"சுயத்தை வெறுக்கும்"** முதல் படியை குறிக்கும். ஒருவர் தேவ சித்தத்தை **(ரோமர் 12:2)** எடுப்பதற்கு முன்பு பூமிக்குரிய நம்பிக்கை மற்றும் ஆசைகளை தானாக முன் வந்து கைவிட வேண்டும்.

மேலும், இது வேதத்தின் "ஒரே ஞானஸ்நானத்தின்" (எபேசியர் 4:5) மூலம் குறிக்கப்படுகிறது.

பூமிக்குரிய வாழ்க்கை மற்றும் அதை சார்ந்த சிந்தையை தியாகம் செய்வது இங்கு தண்ணீர் முழுக்கின் மூலம் அடையாளப்படுத்தப்படுகிறது.

**2.** முதலாம் "குனிதலுக்கு" பிறகு ஒருவர் 21இன்ச் இடைவெளியில் **"சிவப்பு கிரானைட் தொங்கு பலகைக்கு"** முன்பாக நிற்கக்கூடும். இதற்கு அடியில் இரண்டாவது **"குனிதல்"** நடைபெறுகிறது.

### இந்த "சிவப்பு கிரானைட் தொங்கு பலகை" எதை குறிக்கும்?

இது தன் சுயசித்தத்தை வெறுத்த பிறகு கிறிஸ்தவர் தம்முடைய சித்தமாக எடுக்கும் தேவனுடைய தெய்வீக சித்தத்தை - **"சிலுவையை"** குறிக்கும்.

ஆம், இந்த சிவப்பு கிரானைட் தொங்கு பலகைக்கு கீழே குனிவது என்பது **"தன் சிலுவையை எடுத்துக் கொண்டு..."** என்ற கட்டளைக்கு கீழ்ப்படிவதை குறிக்கும். ஆம் இங்கு தான் தன்னை ஒப்புக் கொடுப்பது உண்மையில் நிறைவேறுகிறது.

**3.** சிவப்பு நிற கிரானைட் தொங்கு பலகைக்கு அடியில் குனிந்து வந்த பிறகு ஒருவர் முன் அறையின் விசாலமான பகுதிக்கும் வருகிறார்.

இந்த இடம் இயேசுவின் உபதேசங்களை, அவருடைய முன் மாதிரியை இறுதிவரை அவருடைய மரணத்தை பின் பற்றி - தேவ சித்தத்தை நிறைவேற்ற தன்னை முழுவதுமாக ஒப்புகொடுத்த புது சிருஷ்டி கிறிஸ்தவரின் வாழ்க்கையை குறிக்கிறது.

அந்த மரணத்திற்குள்ளாக கடந்து செல்வதை மூன்றாவது "குனிதல்" குறிக்கிறது. இது இராஜாவின் அறைக்குள் வழி நடத்துகிறது.


## இராஜாவின் அறை

இது மூன்று அறைகளிலும் உயர்ந்த இடத்தில் அமைந்திருக்கிறது. இந்த அறை முழுவதுமாக சிவப்பு கிரானைட்டால் கட்டப்பட்டு ஒரே ஒரு திறந்த பெட்டியை கொண்டுள்ளது.

இவை அனைத்தையும் தேவன் மிக எளிதாக செய்திருக்கிறார். இந்த இராஜாவின் அறையானது தேவன் மனிதனுக்காக தருகிற உயர்ந்த பட்ச ஜீவனை அடையாளப்படுத்துகிறது.



**முழுவதுமாக "சிவப்பு கிரானைட்" போடப்பட்டிருப்பது... தெய்வீகமான ஒன்றை குறிக்கிறது.**




ஆம், இந்த இரட்சிப்பு பரலோகத்திற்குரிய இரட்சிப்பாக இருந்து இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிற விசுவாசிகளுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட திவ்விய சுபாவத்தை பெறுவதை குறிக்கும். இதை குறித்து வாசிக்கையில்,

**2 பேதுரு 1:4 / வெளி. 2:10**


**“இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.”**
**“.... நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்.”**

இதில் ஒரு "**திறந்த பெட்டி**" மூடல் இல்லாமல் இருக்கிறது. இது திவ்விய சுபாவத்தை அடைந்தவர்கள் மரணம் நெருங்க முடியாத நிலையில் இருப்பதை மிக அருமையாக குறிக்கிறது.

**வெளிப்படுத்தல் 20:6**

"**முதலாம் உயிர்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான், அவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை...**"

ஆம், இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரம் இல்லை. இதுவே அழியாமையின் நிலையின் குணாதிசயமாகும். இந்நிலையில் மரணம் என்பது சாத்தியமில்லாததும் அதிகாரமில்லாததுமாக இருக்கிறது **(ரோமர் 2:7 / 1கொரிந்தியர் 15:53,54)** முதன் முதலாக இந்த சுபாவத்தை இயேசு பெற்றார். **(வெளிப்படுத்தல் 1:18 / யோவான் 5:26)** அவருடைய சரீர அங்கங்களாகிய சபையும் இந்த சுபாவத்தை சுதந்தரிப்பார்கள்.



சுவிசேஷ யுகத்தில் இயேசுவின் அடிச்சுவடுகளை மரண பரியந்தம் பின்பற்றுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட "**பெரிதான இரட்சிப்பு**" **(எபிரெயர் 2:3,4)** இதுவே ஆகும்.

**இப்பொழுது, மனுக்குலத்தில் மீதியானோரின் நிலை என்ன?**

**இயேசு கிறிஸ்து உலகம் அனைத்திற்கும் இரட்சகர் அல்லவா?**

இதற்கான பதிலை நாம் வாசிப்போம்.

**1 யோவான் 2:2 / 1 தீமோத்தேயு 2:5,6**

**"நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார்."**

**"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரியசாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது."**

**உலக (எல்லா) ஜனத்திற்கான இரட்சிப்பு என்ற ஒன்று உள்ளதா?**

ஆம், உள்ளது என்றே வாசிக்கிறோம்.

**யோவான் 10:16**

**"இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே**

**யோவான் 11:26**

**"உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார்."**

ஆம், இது முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பின் "கிறிஸ்துவுக்குள் அனைவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்"


1கொரிந்தியர் 15:22 - இயேசுவின் மீது வைக்கும் விசுவாசத்தினால் உலகம் இரட்சிக்கப்படுவதை இங்கு குறிப்பிடுகிறது.

**இந்த உலகத்தின் இரட்சிப்பு கூட மகா பிரமிடில் காண்பிக்கப்பட்டுள்ளது**

## சமதள பாதை

இந்த பாதை கிரேண்டு நுழைவாயிலில் ஆரம்பித்து ராணியின் அறைவரை மட்டும் வழி நடத்துகின்றது.

இந்த பாதை கட்டப்பட்ட உயரம் சற்று விநோதமாக உள்ளது எப்படியெனில், இந்த பாதையின் நீளத்தை ஒருவர் ஏழு பாகங்களாக வகுத்தால், அதில் முதல் 6/7 பாகம் 46.5 இன்ச் உயரம்




கொண்டதாக, ஒருவர் குனிந்து பின் தவழ்ந்து அதை கடக்க வேண்டிய நிலையில் உள்ளது. ஆனால், கடைசி 1/7 பாகமானது இருபது இன்ச்சுகள் அதிகமாக - 66.5 இன்ச் உயரத்தில் ஒருவர் நிமிர்ந்த நிலையில் சவுகரியமாக நடக்கும்படி உள்ளது.

## இவைகள் அனைத்தும் எதை குறிக்கிறது?

ஆதாமின் வீழ்ச்சியிலிருந்து ஆயிர வருட அரசாட்சியின் நிறைவேறுதல் வரையிலான மனிதனுக்கான தேவனுடைய **தெய்வீக திட்டத்தை குறிக்கும்.**

**இதற்கான காலம் 7000 வருடம் என்று வேதம் போதிக்கிறது.**

**யோபு 5:19**

**"ஆறு இக்கட்டுகளுக்கு உம்மை நீங்கலாக்குவார்; ஏழாவதிலும் பொல்லாப்பு உம்மைத் தொடாது."**

இந்த வசனம் ஆழமான கருத்தை உடையதாக இருக்கிறது. அதை குறித்து பின் வரும் வகுப்புகளில் காண்போம்.

ஆனால், மனிதனுக்காக **இரட்சிப்பின் தெய்வீக திட்டத்தை** குறித்த அடிப்படை போதனையாக இந்த **7000 வருடம்** உள்ளது. மேலும், இது **தானியேல் 4:32** ல் இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் "**பூமியின் மிருகங்களுக்குள் 7 காலங்கள்**" அனுமதிக்கப்பட்டு மீண்டுமாக தன் மகிமைக்கு திரும்புவதின் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. இங்கு இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் **பூமியின் மேல் முதலாம் இராஜாவாக** இருந்து தன் மகிமையை இழந்த ஆதாமுக்கு அடையாளமாக இருக்கிறார்.

இவர் தேவனுடைய கிருபையினால் தேவனுடைய ஏற்றகாலத்தில் அவருடைய சந்ததியோடு மீண்டும் மகிமைக்கு கொண்டு வரப்படுவார்.

**"ஆறு இக்கட்டுகளுக்கு.."**

முதல் 6000 வருடங்கள் என்பது பாவம் மற்றும் மரணத்தின் பிடியில் இருக்கக்கூடிய காலமாகும்.

**"ஏழாவதிலும் பொல்லாப்பு உம்மை தொடாது."**

**தேவனுடைய திட்டத்தில் மனிதன் பூரணத்திற்கு திரும்புகிற 1000 வருட காலம் உள்ளது.**

ஆம், தேவ சாயலிலேயே மனிதனை தேவன் சிருஷ்டித்திருந்தார். ஆம், மனுக்குலத்தின் எதிர் காலத்தை குறித்த தேவனுடைய வாக்குத்தத்தத்தை வாசிக்கையில்,

**"புருஷனைப் பசும்பொன்னிலும், மனுஷனை ஓப்பீரின் தங்கத்திலும் அபூருவமாக்குவேன்." - ஏசாயா 13:12**

**"ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார், அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்." - யோபு 23:10**

ஆம், பொன் என்பது ஏற்றகாலத்தில் அனுபவங்களின் மூலம் மனுக்குலம் பெற்று கொள்ளும் குணலட்சணங்களை குறிக்கும்.

இந்த சமாதான பாதையில் கடைசி 1/7 பாகமானது ஆயிர வருட "கிறிஸ்துவின் இராஜ்யத்தை" (எபேசியர் 5:5) குறிக்கும். அப்பொழுது மனுக்குலம் அனுபவத்தின் மூலம் தேவனுடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பதில் உள்ள சமாதானத்தை கற்றுக் கொள்ளுவார்கள்.

**ஏசாயா 2:3**

**"திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்."**

**சகரியா 8:22**

**"அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவும் வருவார்கள்."**

இந்த கால கட்டத்தில் மனுக்குலத்தில் அனைவரும் தங்களுடைய சிருஷ்டிகரை பற்றி அறிந்து கொள்ளும், புரிந்து கொள்ளும். அதே சமயம் அவரிடம் அன்பு கூறும் வாய்ப்பை பெறுவார்கள்.

**சங்கீதம் 22:27,28**


**“பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்; ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும். ராஜ்யம் கர்த்தருடையது; அவர் ஜாதிகளை ஆளுகிறவர்.”**

ஆம், இறுதியாக நாம் நுழைவது,

# இராணியின் அறை

இந்த அறையானது முழுவதும் வெண்மையான சுண்ணாம்பு கற்களினால் கட்டப்பட்டதாக சமதள பாதையின் முடிவில் அமைந்திருப்பதாகும்.

**இராணியின் அறை**




இது மகா பிரமிடில் காணப்படும் மூன்றாவது அறையாகும். ஏற்கனவே இராஜாவின் அறை "**பரலோக இரட்சிப்பை**" குறிப்பதாகவும், குழி ஆதாமுக்குள்ளாக மரித்த நிலை அல்லது எல்லோரும் **(1கொரிந்தியர் 15:22)** கிடக்கின்ற "**நரகத்தை**" குறிப்பதாகவும் கண்டோம்.

இந்த ராணியின் அறையானது தேவன் மனுக்குலத்திற்காக ஏற்படுத்தி அவருடைய இராஜ்யத்தில் **(ரோமர் 6:23)** இயேசு கிறிஸ்துவின் மூலம் தருகிற "**பூமிக்குரிய இரட்சிப்பை**" குறிக்கும்.

இந்த "**வெண்மையான சுண்ணாம்பு**" கல் என்பது கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சியின் முடிவில் மனுக்குலம் அடைகிற பரிசுத்தம் மற்றும் பூரண நிலையை குறிக்கும்.

இதை குறித்து வாசிக்கையில்,

**“அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும்**

**பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்." 1 கொரிந்தியர் 15:24**

## இந்த இரட்சிப்பு எவ்வகையான ஆசீர்வாதத்தை உள்ளடக்கியுள்ளது?

இந்த இரட்சிப்பு மனுக்குலத்தில் கீழ்ப்படிதலை காண்பிக்கும் ஜனங்களுக்கான **"பூமிக்குரிய இராஜ்யத்தை"** உள்ளடக்கியிருக்கும்.

### மத்தேயு 25:34

**"அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்."**

இது ஆதாமின் சிருஷ்டிப்பின் போது (சங்கீதம் 8:5) அவர் பாவம் செய்வதற்கு முன்பு பெற்றிருந்த
**"மகிமையினாலும் கனத்தினாலும் உண்டான கிரீடமாகும்"**

**மரணம், துக்கம், அலறுதல் மற்றும் கண்ணீர் இல்லாத நிலையாக** இருக்கும்.
இதை குறித்து வாசிக்கையில்,

### வெளிப்படுத்தல் 21:4

**"அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது."**

ஆம், மனுக்குலம் முழுவதும் மகிழ்ச்சி அடையும் இரட்சிப்பாக தீர்க்க தரிசனத்தில் சொல்லப்பட்டிருப்பதும் இதுவே ஆகும்.

### ஏசாயா 25:9

**"அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய ரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும்."**

**இதுவே வேதத்தில் எழுதப்பட்ட, "அடையாளம்" மற்றும் "ஸ்தம்பம்" - மாகிய கல்லில் பதிவாகியிருக்கும் தேவனுடைய மாபெரும் தெய்வீக திட்டமாகும். இது சேனைகளின் கர்த்தருக்கு ஒரு "சாட்சியாகவும்" ஒரு "பலிபீடமாகவும்" இருக்கும்.**

**ஏசாயா 19:19,20** - வசனங்களின் நிறைவேறுதல் கீசாவின் மகா பிரமிடு என்று நீங்கள் ஏற்றுக் கொள்ளுவீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

இதனுடன் தேவ திட்டத்தில் வெவ்வேறு யூகங்களை காண்பிக்கிறதும், **மூன்று உலகங்கள் குறிக்கப்பட்டுள்ளதும் அதே சமயம் மூன்று வழிகளாகிய விசாலமான வழி,இடுக்கமான வழி மற்றும் பெரும் பாதையான வழியை** காட்டும் வரை படம் இணைக்கப்பட்டுள்ளதை நீங்கள் காணலாம்.


முடிவாக பழைய உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றான கீசாவின் மகா பிரமிடானது கடந்த 4000 வருடம் நிலைத்திருந்து தற்போதைய உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகி இனி வரும் காலங்களிலும் அதிசயமாக இருந்து மனுக்குலத்தின் சிருஷ்டிகரும் இரட்சகருமாயிருக்கிறவருடைய மகிமை பிரதிபலிக்கும் என்று நாம் கூறலாம்.

**"கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார், அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது."**
**- சங்கீதம் 145:3**

உண்மையில் நாம் அனைவரும்..... ஆமென்.... என்று கூறலாம்.

# ...ஆமென்...

For Private Circulation Only




NOT FOR SALE

For more Subjects contact: MESSENGERS OF CHRIST  E-mail: thekingdom1_6@yahoo.com